# காரைக்கால் அம்மையார் கும்மி



ஆக்கம்

வைரமுத்து கணேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை



உள்ளத்தில் வெள்ளையாய் உமையொரு பாகரை என்னாளும் பணிந்து எண்ணம்போல் அருள் பெற்ற அடியவர்கள், பலபேர். அவர்களிலே, இல்லறத்தோடு நல்லறம் கண்டு இறைவன் கருணையினால் எண்ணம்போல் அருள் பெற்றுக் கொண்ட காரைக்கால் அம்மையாரின் கதையை கவிதையாக்கி சுருக்கமாக யாவருக்கும் புரியும் வண்ணம் வரைந்துள்ளேன். இதிலும் எதும் தவறுகள் இருந்தால் மன்னிக்க வேண்டும்மென்று கேட்டுக் கொள்கின்றேன்.

இது


**வைரமுத்து கணேசன்**
கலைமகள் வீதி
சேனைக்குடியிருப்பு - 02
கல்முனை.
**Te: 071 9238566**


2009.08.30


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# காரைக்கால் அம்மையார்
# கும்மிப் பாடல்கள்

01. சொல்லுக்குமுன்னே அமர்ந்திருக்கும் - எங்கள்
சொக்கநாதர் தன்மகனே
நல்லதமிழுக் கதிபதியே - செல்வ
நாதா கற்பகப் பிள்ளையாரே

02. காரைக்காலில் அவதரித்து - அன்று
கருணாகரன்மேல் பக்திகொண்ட
காரைக்கால் அம்மையார் கதைகூற -எந்தன்
கருத்தில்வாரும் சரஸ்பதியே

03. அனைத்துவளமும் ஒன்றாக - அன்று
அமைந்த சோழ வளநாட்டில்
இணையிலா காரைக்கால் நகர்தனிலே - என்றும்
ஏற்ற வணிகர் பெரும்குலத்தில்

04. தனதத்தன் என்னும் வணிகனுக்கு - அன்று
தவத்திருப்புதல்வியாய் அவதரித்து
புனிதவதி என்னும் பெயரோடு -அன்று
புகழ்பெற்றுவாழ்ந்த அம்மைகதை

05. வாணிபர்நிறைந்து வாழ்ந்து வரும் - நல்ல
வளமுள்ள காரைக் கால்நகரில்
வணிகர்குலத்துக் கதிபதியாய் -அன்று
வாழ்ந்ததனதத்தன் என்பவர்க்கு

06. பேரழகோடொரு பெண்குழந்தை - அன்று
பிறந்ததால் சந்தோஷம் மேலோங்கி
சீராகத்தழுவி சேர்த்தணைத்து - ஒரு
சிறந்த நாமமும் தேர்ந்தெடுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07. புனிதவதியென்று பெயர்சூட்டி -அவன்
பூப்போல வளர்த்து வரும்போது
பனிமலைத் தலையர் பற்றோடு -அந்த
பாவைக்கும் வயது தானுயர

08. பருவவயது தானெருங்க - அந்த
பாவைக்கு துணையொன்று தான்தேடி
அருமை மகளுக்கு ஏற்றவனாய்த் -தந்தை
ஆராய்ந்து பார்த்து வரும்போது

09. நாகப்பட்டினம் தனில்வாழும் -ஒரு
நல்லவணிகன் நிதிபதியின்
மகனாம்பரம தத்தனையே - தன்
மகளுக்குத் துணையாய்த் தேர்தெடுத்து

10. நாழும்முகூர்த்தம் தான்பார்த்து - அவன்
நல்லதோர் தினத்தில் மணம்முடித்து
வாழும் நாள் வரைக்கும் தன்னோடு - மகள்
வாழவேண்டும் மெனவிரும்பி

11. வீட்டோடு மாப்பிள்ளை யாகவைத்து - தான்
விரும்பும் பொருளெலாம் தான்கொடுத்து
மட்டற்ற செல்வங்கள் தான்தேடி - அன்று
மகிழ்ந்திருக்கும் நாளையிலே

12. வாணிபநோக்கமாய் வந்திருந்த - ஒரு
வணிகன் பரம தத்தனுக்கு
கனிந்தமாம்பழம் இரண்டுதன்னை - அவன்
கைலாகுபோலத் தான் கொடுக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. நீங்களே கொண்டு என்வீட்டில் -இதை
நிச்சயம் கொடுங்கள் என்றுசொல்ல
வாங்கிய கனியைத் தான் கொடுக்க -அதை
வாங்கியே வணிகன் கொண்டேகி

14. அம்மையே உம்மவர்தான் கொடுத்தார் -இந்த
ஆசைமிகுந்த மாங்கனியை
நம்பிக்கையோடு வையுமென்று - அவன்
நங்கையிடம் விடை பெற்றேக

15. அம்மையார்வாங்கி வைத்துவிட்டு -அவர்
அடுக்களை நோக்கிச் செல்கையிலே
எம்பிரான் அடியவர் அங்குவந்து - தாயே
எனக்குப் பசிக்கிது என்று சொல்ல

16. அடியவர்தமக்கு அமுதளித்து - நித்தம்
ஆனந்தம்கொள்ளும் புனிதவதி
பிடிசாதம்கொடுக்க அடியவர்க்கு - இன்னும்
முடியாமல் கறிவகை இருந்தாலும்

17. அன்புக்கணவர் அனுப்பிவைத்த - ஒரு
அழகிய மாங்கனி போதுமென்று
அன்போடு அடியாரை தானமர்த்தி - அவர்
அன்னம் படைத்தார் கனியோடு

18. இன்பமாய் அடியவர் உண்டுவிட்டு -சற்று
இளைப்பாறிச் சென்றதன் பின்னாலே
பண்பான வர்த்தகம் தான்முடித்து - அந்த
பரம தத்தனும் வீடுவந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19. நீராடி ஆடை தான்மாற்றி - அவன்
நிறைவேற்றும் கருமம் தான்முடித்து
ஆகாரம் அம்மை பரிமாற - அதை
அன்பாக உண்டு பசியாறி

20. மாங்கனி அனுப்பி வைத்தேனே - என்று
மனைவியைப் பார்த்துக்கேட்டதுமே
பைங்கிளி புனிதவதியாரும் - சென்று
பாக்கியாய் இருந்த ஓர்கனியை

21. கொண்டுவந்தந்த மாதரசும் - தன்
கொற்றவன்கையிலே தான்கொடுக்க
உண்டுசுவைத்து சுவையறிந்து - ஆகா
உண்மையில் இதுதான் சுவையென்று

22. இன்னுமொருகனி இருக்கிறதே -அதை
இப்போதேகொண்டு வாருமென்று
சொன்னதும் அம்மையார் உள்ளேசென்று - அந்த
சொக்க நாதரைத் தான்பணிந்து

23. அடியார்க் கெழிய சிவபரனே -இந்த
அடிமையின் எண்ணம் நிறைவேற
வடிவான மாங்கனி தாருமென்று - அந்த
வனிதையார் கையேந்தி நிற்கையிலே

24. இரப்பவர்தமக்கு மனமிரங்கும் -அந்த
ஈசன் திருவுளம் கொண்டதினால்
அரைநொடியிலே மாங்கனியும் - அந்த
அம்மையின் கையிலே தான்கிடைக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25. போற்றித்துதித்து சிவன்பாதம் - அந்த
பொற்கொடி புனிதவதியாரும்
நற்பேறுபெற்றேன் எனமகிழ்ந்து - அதை
நாயகன் கையிலே தான்கொடுக்க

26. வாங்கிச் சுவைத்த பரமதத்தன் - இது
வானுலகதேவ அமிர்தமென்று
எங்கேயிருந்து இதையெடுத்தாய் - என்று
என்கண்ணே இப்போது சொல்லுமென்றான்

27. அம்மையார் திகைத்துத்தான்பதறி -அந்த
அரனைநம்பாத கணவனுக்கு
எம்பிரான்தந்தது என்றுசொன்னால் - அவர்
எப்படிநம்புவார் எனப்பயந்து

28. உண்மையைச் சொல்லித்தான் ஆகவேண்டும் -என்ற
உறுதிமொழியோடு அம்மையாரும்
என்னன்பே ஈசனிடம்கேட்டேன் - அவர்
ஈந்துகொடுத்தார் எனவுரைக்க

29. சிவனுக்குக்கிடைத்த கனியாலே - அன்று
சிதறிப்போனதவர் குடும்பம்
அவரா உனக்கு கனிதந்தார் - என்
ஆத்தாளே இன்னொன்று வாங்கிவாரும்

30. ஈசன்தந்தாரோ எனநகைத்து -அவன்
இருப்பது உண்மை என்றுசொன்னால்
ஆசையாய் இன்னொன்று வாங்கிவாரும் - என்
ஆத்தாளேயென்று அவனுரைக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31. உள்ளம்நடுங்கி புனிதவதி - தன்
உத்தமன் சொன்னதைதான்கேட்டு
உள்ளேசென்று சிவன்பாதம் - அந்த
உத்தமியாரும் தான் பணிந்து

32. அனைத்துயிர்க்கும் முழுமுதலே - எங்கள்
ஆதிசிவனே அருட்கடலே
எனையாழும் தெய்வமே கருணைகொண்டு - இப்போ
இன்னுமோர்கனி தாருமென்றார்

33. சோதனைசெய்து மனம்மகிழும் - அந்த
சொக்கநாதர் மனமிரங்கி
கோதையின் கையிலே மாங்கனியை - அவர்
கொடுத்ததும் அம்மை மனமகிழ்ந்து

34. அரகரா சிவசிவா ஆண்டவனே - எனக்
அருள் புரிந்த நாயகமே
பரனேபராபரா தாழ்பணிந்தேன் - என்று
பாவைகசிந்து மனமுருகி

35. மாங்கனியேந்திப் புனிதவதி - தன்
மன்னவன்முன்னே சென்றதுமே
வாங்கினான் பரமதத்தனுமே - கனி
மாயமாயப்போ தான்மறைய

36. அதிசயித்துப் பரமதத்தன் -அந்த
அம்மையைத் தெய்வமாய்த் தானினைத்து
விதிவசத்தாலே பட்டுவிட்டேன் - என்று
மேனிமுழுவதும் தான் நடுங்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

37. அன்று முதல் அவள் உறவெல்லாம் -இனி
ஆகாதுஎன்று அவன் நினைத்து
என்றுநாம் பிரிவது என்னுமொரு - பெரும்
ஏக்கத்தில் அவனும் இருக்கையிலே

38. படகிலே பொருட்கள் பல ஏற்றி - அதை
பலபல துறைக்கும் கொண்டுசென்று
கடலிலே வாணிபம் செய்யவென்று - அந்த
காளையும் பேராவல் கொண்டதினால்

39. உற்றார் உறவினர் வழியனுப்ப - அவன்
உள்ளம் மகிழ்ந்து தொழில்செய்து
பற்றோடு பெரும் செல்வம் தான்சேர்த்து - அவன்
பாண்டிய நாட்டிலே போய்ச்சேர்ந்து

40. தனவந்தன் ஒருவன் தன்மகளை -அவன்
தனக்குத்துணையாய்த் தேர்ந்தெடுத்து
மனம்போலவாழ்ந்து வரும்நாளில் - நல்ல
மகவுவொன்று தான்பிறக்க

41. பெற்றகுழந்தைக்கு புனிதவதி - என்ற
பெயரும்சூட்டி அவன் மகிழ்ந்து
உற்றார் உறவினர் காணாமல் - அவன்
உள்ளத்தில் சுமையோடுவாழ்கையிலே

42. மறுமணம் புரிந்து பரமதத்தன் - மிக
மகிழ்ச்சியாய் வாழ்வதைக்கண்டுகொண்ட
உறவினன் ஒருவன் அறிந்துவந்து -அதை
உள்ளபடியே தானுரைக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

43. தனதத்தன் இதனை உணர்ந்ததுமே - அவன்
தன்மகன்தன்னை தானோக்கி
மணமகன் இருப்பிடம் நானறிந்தேன் - என்
மகளே அங்கே போவோமென்றான்

44. அதற்கு மகளும் சம்மதிக்க -மற்ற
அன்புள்ள உறவினர் சேர்ந்துவந்து
எதற்கும் அவனிடம் போவோமென்று - அன்று
எல்லோரும் சேர்ந்து முடிவெடுத்து

45. பாண்டியநாட்டுக்குச் சென்றவர்கள் - அந்த
பரமதத்தன் வாழும் ஊரருகே
கண்டவன் ஒருவனை தூதனுப்பி - அவன்
கருத்தையறிந்து வாருமென்றார்.

46. தூதாகவந்தவன் உரைத்ததனைக் - கேட்டு
துடித்துப்பதைத்து பரமதத்தன்
ஏதோ இதயத்தில் இருப்பதெல்லாம் - இன்று
எல்லோர்முன் வெளியாகும் எனநினைத்து

47. மனைவியும் மகளையும் அழைத்துக்கொண்டு -அவன்
மங்கை புனித வதியார்முன்
இணையிலாத்தெய்வமே என்றுசொல்லி - அவள்
இருபாதம் தொட்டுத் தான்வணங்க

48. மனைவியின் பாதம் வணங்குகிறான் - இந்த
மடையன்பரம தத்தனென்று
ஏனைய மக்கள் தான்கூறி -அப்போ
எள்ளி நகையாடும் வேளையிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

49. கண்கண்டதெய்வம் இந்தஅம்மை - நான்
கண்ணாலே கண்ட உண்மையிது
என்னுள்ளம் தாங்கமுடியாமல் - நான்
இப்படிக்காரியம் செய்ததினால்

50. என்மகள் தனக்கு - புனிதவதி - என்று
என்தெய்வம் பெயரையே நான்சூட்டி
இன்பமாய் அழைத்துவருகின்றேன் - நான்
இதுதான் உண்மை எனவுரைக்க

51. பரமதத்தன் உரைத்தவுடன் -பெரும்
பக்திமேலீட்டால் புனிதவதி
அரனைநினைத்து மனமுருகி - அப்போ
அவன்பாதம் தன்னையே நெஞ்சில்வைத்து

52. ஈசனே இவர் கொள்கை இதுவென்றால் -நான்
இனிமேல் உயிர்வாழத் தேவையில்லை
ஆசையாய் வழர்த்த உடலிலுள்ள - இந்த
அத்தனைசதைப் பொதிகளைந்திடுக

53. பேயுருவம்தனை எனக்கீந்து - என்
பித்தாவுன் பூத கணத்திலொன்றாய்
வாய்விட்டு உன்நாமம் நானோத -நல்ல
வரமுமெனக்கு ஈந்திடுக

54. புனிதவதியார் கேட்டதுமே - அந்த
புண்ணியசீலன் மனமகிழ்ந்து
இனிமையாய்த் தருகிறோம் எனநினைக்க - அப்போ
இருந்தாப்போல் புனிதவதியாரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

55. கண்டவர் அஞ்சும் வகையாக -அந்த
கண்ணுதற்பெருமான் அருளாலே
கொண்டார்பேயுரு மனம்போல - அந்த
கோதை காரைக்கால் அம்மையாரும்

56. தேவர்கள் பூமழை தான்பொழிய - அப்பொ
தேவதுத்துபிகள் தான் முழங்க
மூவர் முனிவர்கள் வாழ்த்துரைக்க - அம்மை
மூலமுதல்வனைத் தான்துதித்து

57. உன்னடிபோற்றும் கணங்களிலே - இப்போ
ஒன்றானேன்நானும் எனமகிழ்ந்து
அண்ணல் சிவனார் வீற்றிருக்கும் - அந்த
அழகிய கைலாய பதிநோக்கி

58. மனோவேகத்தில் சென்ற அம்மை - அப்போ
வடதிசைதன்னைத் தானடைந்து
நானேதலையால் இனிநடந்து - அந்த
நாதனின்பாதம் காண்பேனென்று

59. தலையால்நடந்து வருவதனை - அந்த
தையல்நாயகி கண்டுகொண்டு
மலைவாசன்தன்னை தான்பார்த்து - அந்த
மங்கைகேட்டதும் எம்பெருமான்

60. தன்னெண்ணம்போல இவ்வடிவம் - அவர்
தானே கேட்டுப் பெற்றுக்கொண்டு
எண்ணம்போல் இப்போது இங்குவாறார் - என்று
ஏகாம்ப வாணரும் தான்கூற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

61. காரைக்கால் அம்மையார் அப்போது -சிவன்
கழலடி தன்னை நெருங்கிவர
அரையில் புலித்தோல் அணிந்தசிவன் - அப்போ
அம்மையேயென்று தானழைக்க

62. அப்பா என்று அம்மையாரும் - மிக
ஆனந்தமாகக் குரல்கொடுக்க
இப்போவேண்டுவ தென்னவென்று - அந்த
ஈசனும் மகிழ்ந்து தான்கேட்க

63. இறைவாமை இன்ப அன்புவேண்டும் - இனி
பிறவாமை இன்னும் வேண்டுகிறேன்
பிறந்தால் உனை யென்றும்மறவாத - நல்ல
பேரருள் இன்னும் வேண்டுகிறேன்

64. இன்னுமொன்று வேண்டுகிறேன் -என்று
என்பிரான் திருவடித் தாழ்பணிந்து
என்னப்பா உன்தன் நடனம்கண்டு - நான்
எப்போதும் திருவடிக் கீழமர்ந்து

65. கண்ணான தமிழ்ப்பா பாடவேண்டும் - என்று
காரைக்கால் அம்மையார் கேட்டதற்கு
அண்ணல் சிவனும் மனமகிழ்ந்து -அந்த
அம்மையைப்பார்த்து தான்புகன்றார்

66. பழையனூர் திருவாலங்காட்டினுக்கு - வந்து
கண்ணாரக்கண்டு களியுமென்று
ஏழைக்கெழிய எம்பெருமான் -அன்று
எண்ணம்போல்வரங்கள் தான்கொடுத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

67. ஆனந்தம்பொங்க அம்மையாரும் - அந்த
அப்பன்திருவடி தான்வணங்கி
மனோவேகத்தில் ஒருநொடியில் - அவர்
வந்தாரே திருவாலங் காட்டினுக்கு

68. அம்பலத்திலாடும் எம்பெருமான் -அங்கு
ஆடியநடனக் காட்சி கண்டு
அம்மைமகிழ்ந்து திருவடிக்கீழ் -மெத்த
ஆனந்தக்களிப்பொடு வீற்றிருந்தார்.

69. இறைவன் அம்மையே என்றழைக்க -பெரும்
இனிய பக்தி கொண்டிருந்த
காரைக்கால் அம்மையார் தாழ்பணிந்து - அவர்
களலடி போற்றிப் பணிந்திடுவோம்.

70. காரைக்கால் அம்மையின் கதையிதுதான் - என்று
கற்றமட்டும் கவியாக்கி
சீரான செந்தமிழ்க் கும்மியாக - இதை
செப்பினேன் என்மேல் குறை பொறுப்பீர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எனது வெளியீடுகளாக இதுவரை.....

01. சேனைக்குடியிருப்பு முத்துமாரியம்மன் பெயரில் பொன்னுஞ்சல், வைரவர் அகவல்.

02. அம்மன் அருட்பாகங்கள், ஆதிசிவன் அருட் காவியம்.

03. கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் பத்து, மயானப்பத்து.

04. சேனைக்குடியிருப்பு முத்துவிநாயகர் பெயரில் கண்கொடுத்த கற்பகப்பத்து, திருக்குமரன் வரமருள் பத்து.

05. ஆழிப்பேரலையின் அனர்த்தக் காவியம்.

06. கதிர்காமக் கந்தன் பெயரில் வளிநடைப்பத்து, வளிநடைக்கும்மி.

07. கிட்டங்கிப் பிள்ளையார் பெயரில் பொன்னுஞ்சல்.

08. சேனைக்குடியிருப்பு முத்துமாரியம்மன் பெயரில் ஊர்வலக் கும்மி.

09. துறைநீலாவணை கண்ணகையம்மன் ஊர்வலக் கும்மி.

10. கதிர்காமக் கந்தன் பெயரில் வழிநடைப்பத்து, வழிநடைக்கும்மி.

11. தசவதாரம் கும்மிப் பாடல்கள்.

12. கண்ணப்பநாயனார் கும்மிப் பாடல்கள்.

Brilliant Prenters - Kalmunai - 067 2229778

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org